# குடிவரவு குடியகல்வு திணைக்களம்

## கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்போருக்கான அறிவுரைகள்

(இது விண்ணப்பப்படிவத்துடன் இலவசமாக வழங்கப்படும்)

*(தயவுசெய்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் அனைத்து அறிவுரைகளையும் வாசிக்கவும்)*

**(அ) விண்ணப்பப்படிவத்தைப் (கு.கு. 35 'கே') பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள்:**

1) தேவையான கடவுச்சீட்டுக்களின் வகைகள் : (i) சகல நாடுகளிற்கும், (ii) மத்திய கிழக்கு நாடுகள் உட்பட குறிப்பிட்ட நாடுகள் - இந்தியா, நேபாளம், வங்காள தேசம், பாகிஸ்தான், மாலைதீவு குடியரசு, ஈரான், ஈராக், லெபனான், சிரியா, ஜோர்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், குவைத், கட்டார், பாரெய்ன் மற்றும் யெமென் ஆகிய நாடுகளிற்காகவும், (iii) அவசரகாலச் சான்றிதழ் - இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றிற்காகவும், (iv) ஆளடையாளச் சான்றிதழ் - சகல நாடுகளுக்கும் அல்லது குறிப்பிட்ட நாட்டுக்குச் செல்லுபடியாகக் கூடியதாகவும் வழங்கப்படும். (சம்பந்தப்பட்ட கூடுகளில் "√" என்று குறிப்பிடவும்)

2) இறுதியாகப் பெற்றுக்கொண்ட பிரயாண ஆவணங்களின் (கடவுச்சீட்டு, அவசரகாலச் சான்றிதழ், ஆளடையாளச் சான்றிதழ்) இலக்கத்தை இங்கு எழுதவும். உள்நாட்டில் காணாமல் போயிருந்தால் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது வெளிநாடு ஒன்றில் காணாமல் போயிருந்தால் இலங்கைக்கு வருவதற்காக பாவித்த தற்காலிக பிரயாண ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (முதல் முறையாக விண்ணப்பிப்போருக்கு இது ஏற்புடைத்தாகாது)

3) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடவும். 16 வயதிற்கு மேற்பட்ட சகலரும் அடையாள அட்டையை அதன் நிழற் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

4) உங்கள் முதற் பெயரை ஒரு கூட்டுக்குள் ஒரு எழுத்து என்ற முறையில் எழுதவும். பெயர்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும்
* விண்ணப்பதாரி திருமணத்தின் பின்னர் தமது கணவரின் பெயரைப் பாவித்து பிரயாண ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதாயின் மட்டும் அப்பெயரை இங்கு எழுதவும் (இங்கு திருமண சான்றிதழை அதன் நிழற்பிரதியுடன் ஒப்படைத்தல் வேண்டும்)

5) இலக்கம் 4 இன் கீழ் கூடுகளினுள் எழுதப்பட்ட உங்கள் முதற் பெயரை தவிர்த்து உங்கள் முழுப்பெயரின் மிகுதியை இக்கூடுகளினுள் எழுதவும்.

6) உங்கள் நிரந்தர முகவரியை இங்கு எழுதவும் (இலங்கையில் வதிவிட முகவரி) நகரம், மாவட்டத்தினை சம்பந்தப்பட்ட கூடுகளில் எழுதவும்.

7) நிரந்தர முகவரிக்குரிய மாவட்டத்தினை இங்கு எழுதுதல் வேண்டும்.

8) பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின்படி)

9) பிறப்புச் சான்றிதழ் இலக்கமும் மாவட்டமும் (பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியும், நிழற் பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

10) பிறந்த இடம் (பிறப்புச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிடவும்)

11) சம்பந்தப்பட்ட கூட்டினுள் "√" என்று குறிப்பிடவும்.

12) உங்கள் உயரத்தை சென்ரி மீட்டர்களில் குறிப்பிடவும் (ஒரு அடி 30.4 சென்ரி மீட்டர்களாகும். 1 அங்குலம் 2.54 சென்ரி மீட்டர்களாகும்.)

13) சம்பந்தப்பட்ட கூட்டினுள் "√" என்று குறிப்பிடவும்.

14) உமது தொழில்/நிலை அல்லது பதவியை இங்கு எழுதவும். சொற்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும். (தொழிலை உறுதிப்படுத்த தேவையான சான்றிதழ்களும் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

15) தங்கள் கடவுச்சீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையை எழுதவும்.

16) நீங்கள் வெளிநாடொன்றில் பிரஜாவுரிமையை அல்லது இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட கூடுகளினுள் "√" என்று குறிப்பிடவும். (இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்தால் சான்றிதழை சமர்ப்பிக்கவும்)

17) தங்களை தொடர்பு கொள்ளக்கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்படவும்.

18) தங்கள் மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரியைக் குறிப்படவும்.

* கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தக் கூடியவர்கள் பற்றிய விபரங்கள் பின்பக்கத்தில் குறிப்பிடபபட்டுள்ளது.

**(ஆ) நிழற்படம் :**

(i) சென்ரி மீட்டர் 3.5 × 4.5 அளவில் 3 வர்ண நிழற்படங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) இந் நிழற்படங்கள் பளபளப்பு அல்லது பாதிப்பளபளப்பு அற்ற நிழற்படங்களாக இருத்தல் வேண்டும்.

(iii) நிழற்படத்தில் முகம் நேராக இருத்தல் வேண்டும் என்பதுடன் காதுகள் இரண்டும் தெளிவாகத் தெரிதல் வேண்டும்.
(காதுகள் மறைக்கப்பட்ட நிழற்படங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

(iv) நிழற்படம் உயர்தரக்கடதாசியில் மையடையாளம் மற்றும் புள்ளிகள் இல்லாமல் தெளிவாக அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) முக அமைப்பு மாற்றப்படாமல் நிழற்படம் இருத்தல் வேண்டும்.

(vi) குளிர் கண்ணாடி, வர்ண கண்ணாடி, தடித்த விட்டம் கொண்ட கண்ணாடி அணிந்து நிழற்படம் எடுத்தல் ஆகாது. அவ்வாறு கண்ணாடி அணிந்து நிழற்படம் எடுப்பதாக இருந்தால் கண்கள் தெளிவாகத் தெரியும்படியும் வில்லைகளுக்கூடாக வெளிச்சம் பிரதிபலிக்காமல் எடுக்கப்பட்ட நிழற்படம் சமர்ப்பித்தல் வேண்டும்

**(இ) பெற்றோர்களின் கடவுச்சீட்டுக்களில் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வதற்கான விபரங்களும் அறிவுரைகளும் :**

(i) கு.கு. 35 'சீ' விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ii) பிள்ளைகளின் பெயர்களை அவர்களுடைய பெற்றோர்களின் கடவுச்சீட்டுக்களில் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது அவர்களின் வயது 16 வயதிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(iii) உயிருடன் இருப்பின் பெற்றோர்கள் இருவரும் வருகைதர வேண்டும்.

(iv) பெற்றோர்களின் கடவுச்சீட்டுக்களில் பிள்ளைகளின் பெயர்களை சேர்த்துக் கொள்ளும் போது கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் அவற்றின் நிழற்பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் மூலப்பிரதிகள் திருப்பி அனுப்பப்படும் அல்லது திருப்பி தரப்படும்.

(அ) பெயர் சேர்க்கப்பட வேண்டிய பிள்ளையின் அல்லது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் பிரதிகளுடன்

(ஆ) விண்ணப்பதாரியின் பெற்றோரின் பிள்ளை அல்லது பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக வாழ்க்கைத்துணையின் விருப்பத்தைத் தெரிவிக்கும் கடிதம் *வாழ்க்கைத்துணைவர் வெளிநாட்டில் இருப்பின் குறித்த கடிதம் அவர் இருக்கும் நாட்டு தூதுவராலயத்தின் சிபார்சுடன் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு சமர்பிக்க வேண்டும்.வெளிநாட்டு தூதுவராலயம் இல்லாத நாடுகள் எனில் அங்கு நியமிக்கப்பட்டுள்ள கௌரவ கவுன்சிலின் ஒப்பத்துடன் சமர்பித்தல் வேண்டும்.

(இ) வாழ்க்கைத்துணையின் கடவுச்சீட்டில் பெற்றோரின் தரவுப் பக்கமும் மற்றும் பிள்ளைகள் சேர்க்கப்பட்ட பக்கமும் (வாழ்க்கைத்துணையினால் கடவுச்சீட்டு பெற்றிருக்கப்படாவிட்டால், அதனை தெளிவு படுத்தும் சத்தியக்கடதாசியும் அடையாள அட்டையின் பிரதி ஒன்றும்)

(ஈ) வாழ்க்கைத்துணை இறந்திருந்தால் மரணச் சான்றிதழ்

(உ) விவாகரத்து பெற்றிருந்தால் விவாகரத்து சான்றிதழ் அல்லது நீதிமன்ற கட்டளை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) பிள்ளைகளின் பெயர்களை கடவுச்சீட்டுக்களில் சேர்த்துக் கொள்ளும் போது சம்பந்தப்பட்ட பிள்ளையின் வர்ணப்படங்கள் இரண்டு (2) விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (அந் நிழற்படங்கள் சென்ரி மீட்டர் 2.5 × 3 அளவில் இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் வர்ணப்படங்களை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி வலது பக்க நிழற்படத்தை பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.)

(vi) பிள்ளைக்கு பெயரை ஒப்பமிட முடியாதவிடத்து தாய் அல்லது தந்தையினால் பிள்ளையின் பெயரின் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட கூட்டினுள் எழுதுதல் வேண்டும்.

(vii) புதிதாக கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் போது அந்த நேரத்திலேயே பிள்ளைகளின் பெயரும் அதில் சேர்த்துக் கொள்ளப்படுமானால் அதற்காக மேலதிக கட்டணம் அறிவிடப்படமாட்டாது.

SMART
சின்ன சின்ன கண்ணியமிக்க விஷயங்களைக் கூறும்
செக்கனுக்கு அறவிடப்படும் இலங்கையின் மிகக்குறைந்த IDD கட்டணங்கள்
Sri Lanka Telecom Mobitel
We Care. Always.

**(ஈ) பதினாறு (16) வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கு தனியாக கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளுதல் :**

(i) கு.கு. 35 'கே' விண்ணப்பப்படிவம்

(ii) பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி (நிழற்பட பிரதியுடன்) - ஆங்கில மொழிபெயர்ப்பு பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

(iii) பெற்றோரின் கடவுச்சீட்டுக்களின் தரவுப் பக்கத்தின் நிழற்பிரதி ஒன்று. பிள்ளைகள் சேர்க்கப்பட்ட பக்கத்தின்(பக்கம் இல.6) நிழற்பிரதி ஒன்றுடன் குறிப்பிட்ட கடவுச்சீட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(iv) பெற்றோர்கள் கடவுச்சீட்டுக்கள் பெற்றிருக்காவிட்டால் அவர்கள் கடவுச்சீட்டுக்கள் பெற்றிருக்கவில்லை என்று சத்தியக்கடதாசி ஒன்றும் பெற்றோர்களின் அடையாள அட்டைகளின் நிழற்படப்பிரதி ஒன்றும்.

(v) பிள்ளைகளுக்கு தனியாக கடவுச்சீட்டு ஒன்று பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக பெற்றோரின் விருப்பக்கடிதம் (தாய் அல்லது தகப்பன் ஒருவர் அல்லது இருவரும் வெளிநாட்டில் இருந்தால் அவர்களின் விருப்பக்கடிதத்தினை தொலைநகல் (பக்ஸ்) மூலம் தருவித்து சமர்ப்பித்தல் வேண்டும்.)

(vi) தாய் அல்லது தகப்பன் இறந்திருந்தால் மரணச் சான்றிதழ் நிழற் பிரதியுடன்

(vii) பெற்றோர்கள் விவாகரத்து பெற்றிருந்தால் விவாகரத்து சான்றிதழ் நிழற் பிரதியுடன்

(viii) பிள்ளைகளுக்கு தனியாக கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்கு முன் அப்பிள்ளைகள் தங்கள் தாய் அல்லது தகப்பனின் செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் சேர்க்கப்பட்டிருக்குமாயின் அது முதலில் நீக்கப்படுதல் வேண்டும் அதற்காக கு.கு.35"சீ" படிவத்தினை பூர்த்திசெய்து ரூபா 500.00 கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (இக்கட்டணம் மாற்றத்திற்குட்பட்டதாகும்).

(ix) சென்ரி மீட்டர் 3.5 × 4.5 அளவில் 03 வர்ண நிழற்படங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(x) பிள்ளைகள் வெளிநாடொன்றில் பிறந்திருந்தால் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வழங்கிய இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**(உ) கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தவறுகளை செய்வது 1955 இல 16, 1961 இல. 68, 1993 இல. 16, 1998 இல. 42 மற்றும் 2001 இல. 31 ஆம் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின்படி தண்டனை கிடைக்கக்கூடிய குற்றங்கள் என்று ஞாபகப்படுத்துகின்றோம்.**

(i) தவறான விபரங்களை வழங்குதல்

(ii) போலியான அல்லது தவறான ஆவணங்களைச் சமர்ப்பித்தல்

(iii) செல்லுபடியாகக்கூடிய பிரயாண ஆவணங்களை வைத்துக் கொண்டு இன்னுமொரு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல்

(iv) மற்றவர்களுடைய கடவுச்சீட்டை பயன்படுத்தல்

(v) பெற்றுக் கொண்ட கடவுச்சீட்டை போலியானதாக மாற்றுதல்

(vi) மற்றவர்களுடைய ஆவணங்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ளல்

**(ஊ) கடவுச்சீட்டு காணாமல் போன சந்தர்ப்பங்களிலே கீழே குறிப்பிட்டுள்ளவற்றை சமர்ப்பித்தல் வேண்டும் தவறான விபரங்களை வழங்குதல்**

(i) காணாமல் போனது சம்பந்தமாக பொலிசில் செய்த முறைப்பாட்டு அறிக்கையின் மூலப்பிரதி

(ii) கடவுச்சீட்டு வெளிநாட்டில் காணாமல் போயிருந்தால் அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த தற்காலிக பிரயாண ஆவணம் (நிழற்பிரதியுடன்)

(iii) கடவுச்சீட்டு கட்டணத்திற்கு மேலதிகமாக 10,000 ரூபா தண்டனைப்பணம் (இத் தண்டனைப்பணம் அறிவிடுவது கடவுச்சீட்டு 10 வருட செல்லுபடியாகும் கால எல்லைக்கு உட்பட்டிருந்தால் மட்டும்.)

**(எ) கடவுச்சீட்டு விண்ணப்பத்தை உறுதிப்படுத்தக் கூடியவர்கள் :**

(i) இலங்கை நிருவாக சேவையில், கல்வி நிருவாக சேவையில், பொறியியலாளர் சேவையில், கணக்காளர் சேவையில், திட்டமிடல் சேவையில் உள்ள அலுவலர் ஒருவர்

(ii) குடிவரவு குடியகல்வுத் திணைக்கள உத்தரவு பெற்ற உத்தியோகத்தர்

(iii) வழக்கறிஞர்

(iv) தகைமை பெற்ற வைத்தியர் ஒருவர்

(v) காலாட்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் ஆகிய பிரிவுகளில் நிறைவேற்று அதிகார தரத்தையுடைய அலுவலர் ஒருவர்

(vi) பிரதேச பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரீட்சகர் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி)

(vii) பிரதேச சமுர்த்தி முகாமையாளர், கிராம உத்தியோகத்தர், சமூக சேவை அலுவலர்

(viii) தபாலதிபர், பாடசாலை மற்றும் வித்தியாலய அதிபர், தொழில் உத்தியோகத்தர்

(ix) தோட்ட அதிகாரி

(x) சமாதான நீதவான்

**(ஏ) கட்டணங்கள் :**

| | | ஒருநாள் சேவை | சாதாரண சேவை |
|---|---|---|---|
| (i) | சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு ... ... ... ... ... | ரூபா 7,500 | ரூபா 2,500 |
| (ii) | மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக்கிய குறிப்பிட்ட நாடுகளுக்கான கடவுச்சீட்டு ... ... | ரூபா 2,500 | ரூபா 1,000 |
| (iii) | இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்கான அவசரகால சான்றிதழ் ... ... ... | - | ரூபா 500 |
| (iv) | சகல நாடுகளுக்குமான ஆளடையாள சான்றிதழ் ... ... ... ... | ரூபா 2,500 | - |

(சகல கட்டணங்களும் இலங்கை அரசின் தீர்மானத்தின்படி மாற்றத்திற்குட்பட்டதாகும்)

**(ஐ) பௌத்த மதகுருமாருக்கான கடவுச்சீட்டு**

(i) பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் அடையாள அட்டையின் பிரதியுடன் சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

(ii) சாமனேற பிக்கு சான்றிதழ் அல்லது உபசம்பதா சான்றிதழ் கட்டாயமானது.

**(ஒ) கடமை மற்றும் தூதராண்மைக் கடவுச்சீட்டுக்களில் பிள்ளைகளின் பெயர் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.**

* விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல்

ஒருநாள் சேவை : மு.ப 8.00 - பி.ப 1.30 வரை

சாதாரண சேவை : மு.ப 8.30 - பி.ப 2.00 வரை

SMART
கொழும்பு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திலுள்ள எமது மொபிட்டலின் விசேட கிளைக்கு விஜயஞ்செய்யுங்கள
Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.